## DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

| | |
|---|---|
| Case No: | **SPL.S.C.No.20/2024** |
| Prosecution Witness : | **LW - 12 / PW - 9** |
| Name : ரவிச்சந்திரன் | Taluk : |
| S/o. : | Age : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **13.07.2026**

(எதிரிகள் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் தற்போது அரியலூர் மாவட்ட குற்ற ஆவண காப்பக துறையில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிகிறேன். இதற்கு முன்பு ஜெயங்கொண்டம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக 2024ம் ஆண்டில் பணிபுரிந்தபோது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் செயல்முறை ஆணை19/SJ&HR/Proceedings/ALR/2024 Dated:30.01.2024 ன் படி, மீன்சுருட்டி காவல் நிலைய குற்ற எண்.32/2024, சட்ட பிரிவுகள் 448, 294(b), 323, 506(i) IPC,4 of TNPHW r/w 3(1)(r&s), 3(2)(va) SC/ST Act ன் படி பதிவு செய்த, வழக்கு கோப்பினை பார்வையிட்டு, சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராஜேஸ்வரி, முத்தாயா, ராமானுஜம், ராமதாஸ், திரிசங்கு, செங்குட்டுவன், ராமானுஜம் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். செங்குட்வன், ராமானுஜம் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகசரில் அவர்களிடம் தனித்தனியாக கையொப்பம் பெற்றேன். எனக்கு பின்னிட்டு வந்த காவல் துணை

கண்காணிப்பாளர் இராச்சந்திரன் இவ்வழக்கை மேல் விசாரணை செய்தார். அதற்காக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் செயல்முறை ஆணை C.No.27/Fur Investigation/SJ&HR/ALR/2024, Dated:19.02.2024 ன் படி இவ்வழக்கினை மேல்விசாரணைக்கு எடுத்து கொண்டு, சாட்சிகளை விசாரணை செய்திருகின்றார். ஆனால் அவர் கூடுதல் வாக்குமூலம் எதுவும் சாட்சிகளிடம் பதிவு செய்யவில்லை. இவ்வழக்கில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சனோஜ் என்பவரை விசாரித்து மருத்துவ அறிக்கை பெற்றிருக்கிறார். வட்டாட்சியர் கலிலூர் ரஹமானை விசாரித்து சாதி சான்றிதழ் பெற்றும், உதவி ஆய்வாளர் ரவி, சிறப்பு உதவி ஆய்வாளர் பானுமதியை விசாரித்து வாக்குமூலம் பெற்று எதிரிகள் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்திருக்கிறார். மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.4** ஆகவும், வாதியின் காயச்சான்றிதழ் நகல் **அ.த.சா.ஆ.5** ஆகவும், சாதி சான்று குறித்து வட்டாட்சியரின் அறிக்கை **அ.த.சா.ஆ.6** ஆகவும், மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் செயல்முறை ஆணை 30.01.2024 தேதியிட்டது **அ.த.சா.ஆ.7** ஆகவும், 19.02.2024 தேதியிட்டது **அ.த.சா.ஆ.8** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவ நடந்ததாக சொல்லப்படும் தேதி 22.01.2024 என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருப்பது 30.01.2024 என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை SC/ST Act ன் கீழ் பதிவு செய்யப்பட்ட உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் செயல் முறை ஆணை பிறப்பிக்கப்படும். எனது விசாரணையில் 1ம் எதிரி வன்னியர் இனத்தை சேர்ந்தவர் என்றும், 2,3ம் எதிரிகள் ஆதி திராவிடர் வகுப்பை சேர்ந்தவர் என்றும் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். அ.சா.1 ராஜேஸ்வரிக்கும் எதிரிகளுக்கும் சொத்து குறித்து சிவில் வழக்கு இருப்பதை தெரிந்து கொண்டேனா என்றால்

தெரிந்து கொண்டேன். சிவில் வழக்கு குறித்து இந்த வழக்கில் வாதியும் பிரதிவாதியும் ஆவணங்கள் என்னிடம் கொடுத்தார்களா என்றால் அது இந்த வழக்கிற்கு தேவை இல்லாதது. வாதி மற்றும் எதிரிகள் வீட்டிற்குள் இந்த தகராறு நடத்தது என்றால் இல்லை, பொது இடத்தில் தான் நடந்தது. அந்த பகுதியில் எத்தனை வீடுகள் இருந்தது என்றால் 2 வீடுகள் தான் இருந்தது. அ.சா.1 யை 5 நபர்கள் தாக்கியதாக மருத்துவரிடம் சொல்லியிருக்கிறார் என்றால் ஆவணத்தில் அவ்வாறு தான் உள்ளது. 1ம் எதிரி அ.சா.1 ஆல் தாக்கப்பட்டு அரியலூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று கொண்டார் என்ற விவரத்தை எனது விசாரணையின் போது தெரிந்து கொண்டேனா என்றால் அவ்வாறு எதுவும் இல்லை. அ.சா.1 யை நான் விசாரித்தபோது, எதிரிகள் காலில் கட்டையால் அடித்ததாக சொல்லியிருக்கிறாரா என்றால் இல்லை. 4ம் எதிரி அ.சா.1 யை அசிங்கமாக திட்டி துரத்திவிடுவேன் என்று சொன்னார் என்றால் இல்லை. சம்பவத்தை யார் விலக்கி விட்டார்கள் என்று எனது விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. அ.சா.2 முத்தையாள் உட்காந்திருக்கும்போது, அ.சா.1 ரேசன் கடைக்கு சென்றுவிட்டு காலை 11.00 மணிக்கு திரும்பி வந்தபோது, அப்போது 2ம் எதிரி அன்புதுரை கட்டையால் கதவை அடித்தார் என்று எனது விசாரணையில் சொன்னாரா என்றால் அதுபோல் சொல்லவில்லை. அ.சா.2 சம்பவத்திற்கு முன்பு கண் ஆப்பரேசன் செய்தது பற்றி என் விசாரணையில் சொன்னாரா என்றால் இல்லை. 1ம் எதிரி அ.சா.2 யை நெஞ்சில் கட்டையால் அடித்ததாக சொல்லியிருக்கிறாரா என்றால் நெஞ்சில் கையால் அடித்ததாக சொல்லியிருக்கிறார். அ.சா.2 ம் எதிரிகள் கதவை அடித்ததாக சொல்லியிருக்கிறாரா என்றால் இல்லை. அ.சா.4 செங்குட்டுவன் சம்பவ நடந்த போது அந்த வழியாக போனதாக சொல்லியிருக்கிறாரா என்றால் மாடு வாங்க சென்றதாக சொல்லியிருக்கிறார். அ.சா.6 ராமதாஸ் வியாபாரத்திற்காக போனதாக சொல்லியிருக்கிறாரா என்றால்

சொல்லியிருக்கிறார். அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் சிவில் வழக்கு உள்ளதால், வேண்டுமென்றே பொய்யான வழக்கு கொடுத்திருப்பதாகவும், அதை நான் சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் மீது அ.சா.1 மீன்சுருட்டி காவல் நிலையத்தில் நிறைய பொய் புகார்களை கொடுத்திருக்கிறார் என்றால் அது உண்மையல்ல. அ.சா.1 தாக்கியதால் 1ம் எதிரிக்கு ஏற்பட்ட காயம் குறித்து புகார் கொடுக்கப்பட்டும் காவல் துறை நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் எந்த சம்வமும் நடக்கவில்லை என்றாலும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை–**இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.